# 11.03.2022ம் திகதிய 48வது மாதாந்த சபைக்கூட்டம்

நேரம் : மு.ப 9.30 மணி
காலம் : 11.03.2022ம் திகதி வெள்ளிக்கிழமை
இடம் : சபா மண்டபம் தலைமை அலுவலகம்
தலைமை : கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன்

**கூட்டத்தில் பங்குபற்றியோர்**

- திரு.பத்மநாதன் மயூரன் - கௌரவ தவிசாளர்
- திரு.இராஜமனோகரன் ஜெயகரன் - கௌரவ உபதவிசாளர்
- திருமதி.கௌசலா சிவா - கௌரவ உறுப்பினர்
- திரு.கணேசு முருகையா - கௌரவ உறுப்பினர்
- திரு.இராசையா இராசலிங்கம் - கௌரவ உறுப்பினர்
- திரு.செல்வநாயகம் சிவலோஷன் - கௌரவ உறுப்பினர்
- திரு.தெய்வேந்திரம் கிரிதரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.கபிரியேல்பிள்ளை திருஞானராஜா - கௌரவ உறுப்பினர்
- திருமதி.வாசுகி சுதாகர் - கௌரவ உறுப்பினர்
- திருமதி.ரவிதாஸ்.கோமதி - கௌரவ உறுப்பினர்
- திருமதி.சச்சிதானந்ததேவி செல்லத்துரை - கௌரவ உறுப்பினர்
- திரு.வல்லிபுரம் ஸ்ரீகணேசா - கௌரவ உறுப்பினர்
- திரு.வஸ்ரியாம்பிள்ளை சிறில்றூமன் விஜேந்திரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.கந்தையா குகானந்தன் - கௌரவ உறுப்பினர்
- திரு.சுப்பிரமணியம் விஜயகுமாரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.குமாரசாமி மதுசுதன் - கௌரவ உறுப்பினர்
- திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் - செயலாளர்

**கூட்டத்திற்கு சமூகமளிக்காதோர்**

- திரு.தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி - கௌரவ உறுப்பினர்
- செல்வி.குலேந்திரன் பிரிந்தா - கௌரவ உறுப்பினர்
- திருமதி.அழகேந்திரம் அகிலாண்டரூபி - கௌரவ உறுப்பினர்
- செல்வி.விஜயகுமார் சிந்துஜா - கௌரவ உறுப்பினர்

மேற்படி கூட்டமானது மு.ப 9.30 மணிக்கு கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் அவர்கள் தலைமையில் ஒரு நிமிட மௌன அகவணக்கத்துடன் கூட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். அடுத்து சபைக்கீதம் இசைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் அனைவருக்கும் வணக்கத்தினை தெரிவித்துக்கொண்டு நிகழ்ச்சி நிரலில் முதலாவது விடயம் சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரித்தல். 47 வது மாதாந்த கூட்ட அறிக்கை (பெப்ரவரி) அங்கீகரித்தல். குறித்த அறிக்கைகளில் திருத்தமிருந்தால் அதனைத் தெரிவிக்குமாறும் சரியாயின் அவற்றினை அங்கீகரிக்குமாறும் கௌரவ தவிசாளர் அவர்களினால் சபையினரைக் கோரியதைத் தொடர்ந்து குறித்த அறிக்கை சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 11.03.2022/01**

11.02.2022ம் திகதிய 47வது சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து தவிசாளர் அறிவிப்புகள். குறித்த அறிவிப்பில் மின்சாரத்தினை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. அவை தொடர்பான கடிதம் ஏற்கனவே தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கௌரவ உறுப்பினர்கள் தங்கள் வட்டாரங்களில் மக்களுக்கு

தெரியப்படுத்தி மின்சாரத்தினை சிக்கனமாக பயன்படுத்துவதற்கு வழிப்படுத்தவும். ஏற்கனவே கடிதத்தில் குறிப்பிட்டதைப் போல மாலை 7.00 மணி தொடக்கம் அதிகாலை 5.00 மணிவரையான காலப்பகுதி ஒரு தேவையான சிறந்த நேரம். அவை தவிர ஏனைய நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு நிமிடமும் மின்சாரத்தை சிக்கனப்படுத்துமாறும் அவ்வாறு ஒளிரும் மின்விளக்குகள் தொடர்பாக இணைப்பு துண்டிக்கப்படும் நிலை ஏற்படும். எனவே மக்களுக்கு தெளிவுபடுத்தி மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் மு.ப. 9.50 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகைதந்தார்.

அவர் மேலும் கூறுகையில் எதிர்வரும் 15ஆம் திகதி பி.ப 1.30 மணிக்கு மகளிர் தினம் இடம்பெறவுள்ளது. குறித்த நிகழ்வில் அனைத்து கௌரவ உறுப்பினர்களும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் வெளிவாரி அடிப்படையில் தொழிலாளர்கள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இன்று வரை அதற்கு எவரும் முன்வராத காரணத்தால் வட்டார உறுப்பினர்கள் தங்களுக்கு தெரிந்தவர்கள் இருப்பின் அவர்களை இனம் கண்டு அறியத்தரவும் என கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து உபகுழுக்களின் சிபார்சுகள். அவற்றில் 21.02.2022ஆம் திகதிய சுகாதாரக்குழு சிபார்சுகள் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**தீர்மானம் 11.03.2022/02**

சுகாதாரக்குழு சிபார்சுக்கமைவாக டெங்கு பரவல் ஏற்படுவதால் வட்டார உறுப்பினர் மூலமாக விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தி சனசமூகநிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் மூலம் சிரமதானங்களை ஒழுங்குபடுத்தி மேற்கொள்வதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்களினால் தமது பகுதியில் மழையின் பின்னர் வீதியோரம் புற்கள் காணப்படுவதால் ஒரு தடவை எமது தொழிலாளிகளை கொண்டு அகற்றித் தருமாறு கேட்டுக்கொண்டார்

கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் அவர்கள் மு.ப. 10.00 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகைதந்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் கோரிக்கை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அகற்றித்தரப்படும் எனத் தெரிவித்தார்.

**தீர்மானம் 11.03.2022/03**

சுகாதாரக்குழு சிபார்சுக்கமைவாக நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் வீடுகளை அல்லது வீடுகளிலுள்ள அறைகளை வாடகைக்கு வழங்கும் வீட்டு உரிமையாளர்கள் குறித்த விபரம் தொடர்பாக பிரதேசசபையில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என பத்திரிகையில் அறிவித்தல் வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் அவர்கள் மு.ப. 10.01 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகைதந்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.வ.சிறில்றூமன் விஜேந்திரன் அவர்கள் அவர்கள் மு.ப. 10.01 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகை தந்தார்.

கோண்டாவில் இந்து மயானத்திற்கு அருகிலுள்ள காணி தொடர்பாக கலந்துரையாப்பட்ட போது கௌரவ தவிசாளர் அவர்களினால் சென்ற சபை காலத்தில் குறித்த காணி கொள்வனவு செய்யப்பட்டு இறுதிக்

கொடுப்பனவு செய்யப்படாது காணப்படுகின்றது. குறித்த இறுதிக்கொடுப்பனவு வழங்குமாறும் தவறின் குறித்த காணியை மீள தமக்கு ஒப்படைக்குமாறு அவர்களது சட்டத்தரணி மூலமாக நோட்டீஸ் மூலம் அறியத்தந்துள்ளனர். அதற்கான இறுதிக்கொடுப்பனவினையும் வழங்கி கிறிஸ்தவ மக்களின் கோரிக்கைக்கு அமைவாகவும் எமது நல்லூர் தொகுதிக்குள் கிறிஸ்தவ மயானம் போதியதாக இல்லாமையினை கருத்தில் கொண்டும் குறித்த காணியை கிறிஸ்தவ மயான பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/04**

சுகாதாரக்குழு சிபார்சுக்கமைவாக கோண்டாவில் இந்து மயானத்திற்கு அருகிலுள்ள காணியில் வெளியாட்கள் குப்பைகளை கொட்டி எரியூட்டுவதை தடுக்கும் நோக்கில் குறித்த காணிக்குரிய விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் விலைமதிப்பீடு கிடைக்கப்பெற்றதும் அக்காணிக்கு வழங்கப்படாதுள்ள இறுதிக்கொடுப்பனவினை வழங்கி கொள்வனவு செய்வதெனவும், குறித்த பகுதி கிறிஸ்தவ மக்களின் கோரிக்கைக்கு அமைவாகவும் எமது நல்லூர் தொகுதிக்குள் கிறிஸ்தவ மயானம் போதியதாக இல்லாமையினை கருத்தில் கொண்டும் குறித்த காணியை கிறிஸ்தவ மயான பயன்பாட்டிற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திருதெ.கிரிதரன் அவர்கள் மு.ப. 10.05 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகை தந்தார்.

கௌரவ உறுப்பினர் திருகு.மதுசுதன் அவர்கள் மு.ப. 10.05 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகை தந்தார்.

**தீர்மானம் 11.03.2022/05**

சுகாதாரக்குழு சிபார்சுக்கமைவாக செம்மணிப்பகுதியினை வலி.கிழக்கு பிரதேசசபை தங்கள் தரப்பில் 10 ஊழியர்களையும் எமது பிரதேசசபையின் 10 ஊழியர்களை வைத்து துப்பரவு மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் அவர்கள் மு.ப. 10.06 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகை தந்தார்.

**தீர்மானம் 11.03.2022/06**

சுகாதாரக்குழு சிபார்சுக்கமைவாக அரியாலைப்பகுதியில் குப்பை கொட்டுவதற்கு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட இடம் பள்ளமாக இருப்பதனால் மழைகாலங்களில் குப்பைகள் தரம் பிரிக்க முடியாதநிலை ஏற்படும் என்பதனை கருத்தில் கொண்டு அப்பகுதியினை அடையாளப்படுத்தி குப்பை தரம்பிரிக்கும் இடம் என விளம்பரப்படுத்தி மக்களின் சம்மதத்துடன் குறித்த இடத்தை உயர்த்தி இரு பாதுகாப்பு வேலி அமைத்து உள்பகுதியில் தரம்பிரிக்கும் இடமாக சபையால் பயன்படுத்துவதென கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/07**

சுகாதாரக்குழு சிபார்சுக்கமைவாக தற்போது சேவையினைப் பெறும் நிறுவனத்திடமிருந்து வெளிவாரி அடிப்படையில் இரு காவலாளிகளை கோரிய போது ஆளணியின்மையாகவுள்ளது எனத் தெரிவித்துள்ளமையால் குறித்த நிறுவனத்திற்கு அடுத்து கேள்வித்தொகையில் சித்தி பெற்ற நிறுவனத்திடமிருந்து வெளிவாரி அடிப்படையில் இரு காவலாளிகளை பெற்று உடன் சேவையில் ஈடுபடுத்துவதெனவும் அப்பகுதியில் Wireless camera பொருத்தி குப்பை வீசுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உபகுழுக்களில் அடுத்து 09.03.2022ஆம் திகதிய சந்தைக்குழு சிபார்சுகள் காட்சிப்படுத்தப்பட்டு சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 11.03.2022/08**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக கீரைக்கடை, தேங்காய் கடை, பழக்கடைகளை இடம் மாற்றுதல் தொடர்பாக குறித்த வியாபாரிகளை எதிர்வரும் 2022.03.16ஆம் திகதி அழைத்து கலந்துரையாடுவதென கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/09**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக சந்தை வியாபாரம் நிறைவடைந்த பின்னர் தேவையில்லாதவர்கள் உள்நுழையாதவாறு 3 மாடிகளின் படிகளுக்கும் கேற் அமைத்தல் மற்றும் தேனு களஞ்சிய முற்பக்கமுள்ள இடத்தை நெற் அடித்து பாதுகாப்பு மேற்கொள்வதுடன் மிகுதி இடத்திற்கு நெற் அடித்து பொருத்தமான பாவனைக்கு வாடகைக்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/10**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக திருநெல்வேலி சந்தையில் பால் கடைக்கு அருகில் சீமெந்திலானான அறை அமைத்து அதனை விளம்பர சேவைக்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் மு.ப. 10.35 மணியளவில் சபைக்கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

சந்தைக்குழு சிபார்சில் வாகனத்தரிப்பதிடத்தினுள் காணப்படும் இரு நினைவுக் கல்வெட்டருகில் சமூக சீர்கேடுகள் நிகழ்வது அவதானிக்கப்பட்டுள்ளமையால் குறித்த கல்வெட்டுக்கள் நிறுவப்பட்டுள்ள கட்டினை அகற்றி அவற்றினை பாதுகாப்பாக தற்போதைய அலுவலக அறைப்பகுதியில் நிறுவுவது தொடர்பாக சபையில் விரிவாக ஆராயப்பட்ட போது கௌரவ உறுப்பினர்களான திரு.வ.ஸ்ரீகணேசா, திரு.க.முருகையா, திரு.க.திருஞானராசா ஆகியோரால் கல்வெட்டினை பார்வையிட்ட பின்னர் அது தொடர்பான முடிவினை எடுக்கலாம் எனத்தெரிவித்த போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு பார்வையிடாதவர்கள் தேனீர் இடைவேளையின் போது சென்று பர்வையிட்டு இன்றைய கூட்டத்திலேயே இறுதி முடிவினை எடுப்பது எனவும் அது வரை குறித்த சிபார்சினை ஒத்திவைத்து சந்தைக்குழுவின் ஏனைய சிபார்சுகள் ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 11.03.2022/11**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக திருநெல்வேலிச்சந்தையில் வாகனத்தரிப்பிடத்தினுள் காணப்படும் இரு நினைவுக் கல்வெட்டருகில் சமூக சீர்கேடுகள் நிகழ்வது அவதானிக்கப்பட்டுள்ளமையால் குறித்த கல்வெட்டுக்கள் நிறுவப்பட்டுள்ள கட்டினை அகற்றுவது தொடர்பாக கல்வெட்டுள்ள இடத்தை இதுவரை பார்வையிடாத கௌரவ உறுப்பினர்கள் இன்றைய தினம் தேனீர் இடைவேளையில் நேரடியாக சென்று பார்வையிட்டு தீர்மானிப்பதற்கு ஏதுவாக இச் சிபார்சினை ஒத்தி வைத்து இன்றைய சபைக்கூட்டத்திலேயே தீர்மானம் மேற்கொள்வதென கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/12**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக சந்தையில் விற்பனை செய்யப்படும் மருந்தடித்த பழங்கள் விற்பனை செய்வது தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி ஊடாக அறிவுறுத்தல் வழங்கி நடவடிக்கை எடுப்பதென கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/13**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக திருநெல்வேலிச் சந்தை உட்புறம் உள்ள வாழைப்பழ கடையினை கடந்த காலங்களில் உள்ளவாறு HNB பகுதிக்கு பின்புறம் தற்காலிகமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதென கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/14**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக வரும் மாதத்தில் இருந்து எமது சந்தையில் நாட்டாமையாக கடமை புரியும் 30 நபருக்கும் T-Shirt வழங்கி மக்கள் குறித்த நாட்டாமைகளை இனம் காணும் வகையில் அவர்களை நாட்டாமை வேலைக்கு பயன்படுத்துவதெனவும் வேறு நபர்கள் குறித்த கடமைக்கு அனுமதிப்பதில்லை எனவும் கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/15**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக சந்தை வாசலில் தரித்திருக்கும் ஆட்டோகளை காவலாளிகள் மூலம் ஆட்டோ தரிப்பிடத்திற்கு அனுப்புவதென அறிவித்தல் வழங்கி நடவடிக்கை எடுப்பதெனவும் அதன் பிரதியை பொலிஸ் நிலையத்திற்கு அனுப்புவதெனவும் கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/16**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக சந்தைப்பகுதி மற்றும் சந்தை உள்வாயில் வெளிவாயில், நடைபாதை ஆகிய பகுதிகளில் துப்புதல் போன்ற சுகாதார சீர்கேடுகளை மேற்கொள்வதற்கு தடைவிதிப்பதெனவும், குறித்த தடைகளை மீறி செயற்படுபவர்களை கண்காணிப்பு கமரா மூலம் கண்காணித்து ரூபா 500.00 தண்ட அறவீடு மேற்கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அனுமதியைக் கோருவதென கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/17**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக சந்தையில் இறுதியாக கீழ்கடைகளிலுள்ள மொத்த வியாபாரிகள் சில்லறையாக வியாபாரம் செய்வதற்கு எதிராக இறுதி அறிவித்தல் வழங்கி தவறின் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதென கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/18**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக சந்தை மற்றும் சந்தைக் கடைகளில் இருந்து திருட்டு மின்னிணைப்பு பெறுவது தொடர்பாக நேரடியாக சென்று பார்வையிட்டு சட்டவிரோதமாக பெறப்பட்ட மின்னிணைபினை துண்டிப்பு மேற்கொள்வதற்கு சபை அனுமதி வழங்கவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/19**
சந்தைக்குழு சிபார்சுக்கமைவாக சந்தை மற்றும் சந்தை கடைகளில் வியாபாரம் செய்வோர் தமக்கு ஒதுக்கப்பட்ட பகுதியை தவிர்ந்த ஏனைய இடங்களில் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்கள் காட்சிப்படுத்துவது மற்றும் வாகனங்கள் நிறுத்துவது போன்றவை தடைசெய்யப்படுவதாக இறுதி அறிவித்தல் வழங்குவதெனவும் தவறின் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதெனவும் கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தேனீர் இடைவேளைக்காக மு.ப. 10.45 மணி முதல் 11.30 மணிவரை சபை ஒத்திவைக்கப்பட்டது.**

தேனீர் இடைவேளையின் பின்னர் சபை ஆரம்பிக்கையின் கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் சமூகமளிக்கவில்லை.

தேனீர் இடைவேளையினைத் தொடர்ந்து சந்தைக்குழுவின் சிபார்சில் வாகனத்தரிப்பிடத்தில் காணப்படும் நினைவுக்கல்வெட்டினை பாதுகாப்பாக எடுத்து அலுவலக அறையின் முகப்பில் வைத்தல் எனும் சிபார்சு சபையில் எடுத்துக்கொண்ட போது திருநெல்வேலிச்சந்தையிலுள்ள கல்வெட்டினை பார்வையிட்ட கௌரவ உறுப்பினர்கள் குறித்த கல்வெட்டினை அகற்றி பாதுகாப்பாக அலுவலக அறை முகப்பில் வைக்கலாம் எனத்தெரிவித்ததை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/20**
திருநெல்வேலிச்சந்தையில் வாகனத்தரிப்பிடத்தினுள் காணப்படும் இரு நினைவுக் கல்வெட்டருகில் சமூக சீர்கேடுகள் நிகழ்வது அவதானிக்கப்பட்டுள்ளமையால் குறித்த கட்டினை அகற்றி இரு கல்வெட்டுக்களையும் பாதுகாப்பாக எடுத்து கமேரா அறை வாயிலில் நிறுவுவதென கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உபகுழு சிபார்களில் அடுத்து 02.03.2022, 04.03.2022 மற்றும் 10.03.2022ஆம் திகதிய பெண்கள் மற்றும் சிறுவர் குழு சிபார்சுகள் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/21**
பெண்கள் மற்றும் சிறுவர் குழு சிபார்சுக்கமைவாக மகளிர் தின விருந்தினர்களாக கீழ்வருவோரை அழைப்பதற்கு சபையால் தழுவு அனுமதி வழங்கவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கலாநிதி திருமதி.மனோன்மணி சண்முகதாஸ் (ஓய்வு நிலை போராசிரியர்)
- கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் (ஓய்வு நிலை விரிவுரையாளர்)
- திருமதி.சுலோச்சனா முருகநேசன் (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
- திருமதி.எழிலரசி அன்ரன் யோகநாயகம் (பிரதேச செயலர், பிரதேச செயலகம், நல்லூர்)
- திருமதி.சுஜீவா சிவதாஸ் (ஆணையாளர், மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்)
- வைத்திய கலாநிதி திருமதி. துவாரகா மதன் ( மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி, நல்லூர்)
- திருமதி.கோசலை மதன் ( சிரேஸ்ட விரிவுரையாளர், சட்டத்துறை, யாழ்ப்பாணம்)

**தீர்மானம் 11.03.2022/22**
சாதனை மங்கையர் விண்ணப்பங்களை பரீட்சித்து மதிப்பிடுவதற்கு பின்வருவோர் குழுவாக செயற்பட சபை தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கலாச்சார உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நல்லூர்
- சமூகசேவை உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நல்லூர்
- கிராம சேவைகள் உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நல்லூர்
- திருமதி.சு. சிவசக்தி - அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேசசபை
- திரு.சு.சுதாகரன் - முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், நல்லூர் பிரதேசசபை

**தீர்மானம் 11.03.2022/23**
பெண்கள் மற்றும் சிறுவர் குழு சிபார்சுக்கமைவாக குறித்த மகளிர் தின விழாவிற்கு ஒதுக்க நிதி போதாமையால் நிதிப் பங்களிப்பு பெறுவதென கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 04 வது விடயம் கோண்டாவில் ஐயப்பன் ஆலயத்தருகிலுள்ள சபைக்கடைகள் தொடர்பானது. குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்ட போது கௌரவ தவிசாளர் அவர்களினால் ஏற்கனவே கேள்வி கோரப்பட்டு குறித்த கேள்வியில் திரு.சி.நவனீதன் அவர்களுக்கே கொக்குவில் ஆடியபாதம் கடையும் கோண்டாவில் ஐயப்பன் ஆலயத்தருகிலுள்ள இரு கடைகளும் கிடைக்கப்பெற்றமையால் ஒரே பெயரில் 3 கடைகளும் வழங்குவது தொடர்பாக எமது நடைமுறை சிக்கல் காரணமாக அவருக்கு ஆடியபாதக்கடையினை மட்டும் வழங்கி ஏனைய இருகடைகளையும் இடைநிறுத்தி சபை அனுமதியுடன் மீள் கேள்வி கோரப்பட்டது. குறித்த மீள்கேள்வி கோரப்பட்டு இதுவரை எவராலும் மீள் கேள்விக்கு விண்ணப்பிக்கவில்லை. எனவே ஏற்கனவே விண்ணப்பித்தவருக்கே வழங்குவதா இல்லையா என மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சபையிடம் கோரிய போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டது. அதன்போது கௌரவ தவிசாளர் அனுமதியுடன் செயலாளர் அவர்கள் கருத்துரைக்கையில் ஒரே நபர் 3 கடைகளையும் எடுத்தமையால் ஒரு கடையினை மட்டும் அவருக்கு சபை அனுமதியுடன் வழங்கப்பட்டது. சுற்றுநிருபத்தில் ஒருவருக்கு ஒரு கடை தான் வழங்கலாம் எனக் குறிப்பிடாத சந்தர்ப்பத்திலும் வாழ்வாதார வசதி கருதி சபையில் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் எல்லோருக்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் மீள கேள்வி கோருவதென தீர்மானிக்கப்பட்டு மீள் கேள்வி கோரப்பட்டது. குறித்த மீள்கேள்விக்கு ஒருவரும் விண்ணப்பிக்கவில்லை. ஏற்கனவே விண்ணப்பித்த நபர் கோரிய தொகைக்கு வழங்குவதற்கு சபை தீர்மானித்தால் வழங்கலாம் எனத் தெரிவித்தார். குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு சபையின் வருமானம் இழக்கப்படுவதை ஏற்கனவே தீர்மானித்து ஏனையவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு குறித்த கடையினை ஏற்கனவே விண்ணப்பித்தவருக்கு அதே தொகைக்கு வழங்கலாம் எனத் தெரிவித்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/24**

கோண்டாவில் ஐயப்பன் ஆலயத்தருகிலுள்ள சபைக்கடைகளாகிய கடை இல 01, கடை இல 02 அகியவற்றுக்கு மீள்கேள்வி கோரிய போது எவரும் விண்ணப்பிக்காமையால் ஏற்கனவே 1வது கேள்வி அறிவித்தலில் சித்திபெற்ற கேள்விதாரராகிய திரு.சிவபாதசுந்தரம் நவனீதன் அவர்களுக்கே அவரால் கோரப்பட்ட கீழ்வரும் தொகைகளுக்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடை இல 01 - ரூபா 611,500.00

கடை இல 02 - ரூபா 431,000.00

நிகழ்ச்சி நிரலில் 05 வது விடயம் பெப்ரவரி மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை அங்கீகரித்தல் குறித்த விடயம் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபை அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/25**

பெப்ரவரி மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கையினை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திருவ.ஶ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| அனுமதியளிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை - மாசி - 2022 | | | | | |
|---|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | | |
| இல | விண்ணப்ப இல | பெயர் | முகவரி | கட்டட விபரம் | அனுமதித்த திகதி |
| 1 | N/02/2022 | த.ஶ்ரீகாந் | சிவன் வீதி | மதில் | 11.02.2022 |
| 2 | N/14/2021 | வே.திருச்செல்வம் | பலாலி வீதி | வீடு | 11.02.2022 |
| 3 | N/113/2021 | சா.ஜேம்ஸ் | உதயபுரம் | வீடு | 11.02.2022 |
| 4 | N/114/2021 | செ.விபூசன் | இராஜவீதி | மதில் | 11.02.2022 |
| 5 | N/109/2020 | பே.மரியதாசன் | மணிப்புரி 2ம் குறுக்கு | வீடு | 11.02.2022 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | N/110/2018 | தர்மராசா ஜெயலதா | பலாலி வீதி | 4 மாடி கடை, வீடு | 18.02.2022 |
| 7 | N/45/2021 | பொன்னு பொன்ராசா | பரமேஸ்வரா கல்லூரி ஒழுங்கை | திருத்திய 3 மாடி வீடு | 18.02.2022 |
| 8 | N/06/2021 | வீ.சுதாகரன் | பலாலி வீதி | மதில் | 18.02.2022 |
| 9 | N/73/2020 | நி.லலிதாம்பாள் | பலாலி வீதி | திருத்திய மாடி வீடு | 18.02.2022 |
| 10 | N/140/2021 | கோகுலன் அக்\தா | பலாலி யாழ் வீதி | 2மாடி வீடு | 18.02.2022 |
| 11 | N/151/2021 | ச.சிறிதரன் | நாவலடி ஒழுங்கை | 2மாடி வீடு | 18.02.2022 |
| 12 | N/162/2021 | முருகானந்தன் தமயந்தி | இராஜவீதி | வீடு | 18.02.2022 |
| 13 | N/143/2021 | வீரசிங்கம் சுதாகரன் ராதிகா | பலாலி வீதி | 2மாடி வீடு | 18.02.2022 |
| 14 | N/130/2021 | நாகேந்திர மூர்த்தி ஜெகசோதி | பிள்ளையார் கோயில் ஒழுங்கை | 2மாடி வீடு | 18.02.2022 |
| 15 | N/158/2021 | மரியதாஸ் மனோஜ்குமார் | மணிப்புரி 2ம் ஒழுங்கை | மதில் | 25.02.2022 |
| 16 | N/159/2021 | மரியதாஸ் மனோஜ்குமார் | உதயபுரம் கடற்கரை வீதி | மதில் | 25.02.2022 |
| 17 | N/07/2022 | பரமேஸ்வரன் சந்திரவதனி | கலாசாலை ஒழுங்கை | வீடு | 25.02.2022 |
| 18 | N/08/2022 | ரகுநான் குணேஸ்வரி | மாரியம்மன் வீதி | 2மாடி வீடு | 25.02.2022 |
| 19 | N/100/2020 | தம்பித்துரை ஜெயமதி | அரசடி ஒழுங்கை | திருத்திய வீடு | 25.02.2022 |

| கொக்குவில் உப அலுவலகம் | | | | | |
|---|---|---|---|---|---|
| **இல** | **விண்ணப்ப இல** | **பெயர்** | **முகவரி** | **கட்டட விபரம்** | **அனுமதித்த திகதி** |
| 1 | K/03/2022 | யோ.சுகந்தி | பலாலி வீதி | Gate | 11.02.2022 |
| 2 | K/239/2021 | தி.யாதவன் | கேணியடி லேன் | கடை | 11.02.2022 |
| 3 | K/155/2021 | சு.குகவரதன் | இருபாலை வீதி | 3 மாடி கடை,வீடு | 18.02.2022 |
| 4 | K/191/2021 | தி.ராகவன் | K.K.S. வீதி | Culvert | 18.02.2022 |
| 5 | K/204/2021 | நா.நவரத்தினம் | கமட்டன் வீதி | 3 மாடி கடை,வீடு | 18.02.2022 |
| 6 | K/240/2021 | ச.சுதர்சினி | குமரகோட்டம் | வீடு | 18.02.2022 |
| 7 | K/259/2021 | செ.மகேஸ்வரன் | குளங்கரை ஒழுங்கை | வீடு | 18.02.2022 |
| 8 | K/268/2018 | சொ.பாலநிகேதன் | கேணியடி லேன் | 2 மாடி வீடு | 18.02.2022 |
| 9 | K/287/2018 | கணபதிப்பிள்ளை சுமித்திரன் | முருகமூர்த்தி ஒழுங்கை | 2 மாடி வீடு | 25.02.2022 |
| 10 | K/10/2022 | தர்மலிங்கம் பொன்மலர் | ஞானவைரவர் கோயில் ஒழுங்கை | 2 மாடி வீடு | 25.02.2022 |
| 11 | K/20/2022 | நாகராசா இராஜலிங்கம் | கருவப்புலம் ஒழுங்கை | மதில் | 25.02.2022 |
| 12 | K/24/2022 | ஜெராட்ராஜ்குலெந்திரன் தர்சினி | கலட்டி முந்தல் லேன் | மதில் | 25.02.2022 |

நிகழ்ச்சி நிரலில் 06வது விடயம் பெப்ரவரி மாதத்திற்கான கொடுப்பனவுகளுக்கு தழுவு அனுமதி பெறல். குறித்த விடயம் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபை அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/26**
பெப்ரவரி மாதத்திற்கான கொடுப்பனவுகளுக்கு தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| V.No | Date | Cash Book 162-1001-00000-920 | Details - February 2022 | Cash | XE |
|---|---|---|---|---|---|
| G/1 | 1 | ஆர் சன்சிபன் | மீள் சுழற்சிப் பொருட்களுக்கான வைப்பு மீளளிப்பு | 5,000.00 | |
| | | | | 5,000.00 | - |
| G/2 | 8 | பொதுமுகாமையாளர் ப நோ கூ ச | வெளிவாரித் தொழிலாளர் கொடுப்பனவு | 568,176.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G/3 | | நேசன் பில்டேஸ் | வட்டார ரீதியிலான வேலை வட்டாரம் 4 | 471,854.17 | 24,834.43 |
| G/4 | | தரணி சிவில் இஞ்சினியர்ஸ் | மீள் தாரிடல் வட்டாரம்4 5 6 7 | 1,135,483.61 | 59,762.29 |
| | | | | **2,175,513.78** | **84,596.72** |
| | | | | **5,000.00** | **-** |
| | | | | **2,180,513.78** | **84,596.72** |
| G/5 | 10 | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | விசேட கடன் | 136,000.00 | |
| G/6 | | மாபிள் சிவில் கென்ஸ்ரக்சன் | கொக்குவில் கடைத்தொகுதி வற் | 63,875.84 | |
| | | | | **199,875.84** | **-** |
| | | | | **2,180,513.78** | **84,596.72** |
| | | | | **2,380,389.62** | **84,596.72** |
| G/7 | 14 | பி விசாகன் | பத்திரிகை | 7,600.00 | |
| G/8 | | பி விசாகன் | பத்திரிகை | 6,300.00 | |
| G/9 | | சூரியா ஹாட்வெயார் | மின்சாரப்பொருட்கள் கொள்வனவு | 995.00 | |
| G/10 | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | ஒலிபெருக்கி திருத்தப்பொருட்கள் கொள்வனவு | 650.00 | |
| G/11 | | சிறீலங்கா ரெலிக்கொம் | தொலைபேசிக் கட்டணம் | 17,061.48 | |
| G/12 | | இலங்கை மின்சாரசபை | மின் கட்டணம் | 5,061.90 | |
| | | | | **37,668.38** | **-** |
| | | | | **2,380,389.62** | **84,596.72** |
| | | | | **2,418,058.00** | **84,596.72** |
| G/13 | 17 | கே ஜெயபிரசாந் | தவிசாளரின் வாகன வாடகை | 125,000.00 | |
| | | | | **125,000.00** | **-** |
| | | | | **2,418,058.00** | **84,596.72** |
| | | | | **2,543,058.00** | **84,596.72** |
| G/14 | 18 | செல்வா எலக்ரிக்கல்ஸ் | வீதி விளக்கு | 41,200.00 | |
| G/15 | | பொதுமுகாமையாளர் இலங்கை மின்சாரசபை | மின் விளக்கு பொருத்ததல் கட்டணம் | 12,128.84 | |
| G/16 | | பொதுமுகாமையாளர் இலங்கை மின்சாரசபை | புதிய மின் இணைப்பு | 24,000.00 | |
| G/17 | | பிரசன்ன எஸ் கூரே | புத்தகம் | 2,400.00 | |
| | | | | **79,728.84** | **-** |
| | | | | **2,543,058.00** | **84,596.72** |
| | | | | **2,622,786.84** | **84,596.72** |
| G/18 | 21 | எஸ்ரிஎஸ் சிவில் இஞ்சினியரிங் | சுவர் அலுமாரி பொருத்தல் கொடுப்பனவு | 1,324,545.60 | 69,502.40 |
| G/19 | | எஸ் அன்ரன் | வாகன திருத்தம் | 144,000.00 | |
| G/20 | | தர்ணிகா மோட்டோஸ் | வாகன திருத்தம் | 89,650.00 | |
| G/21 | | சந்திரா பாதுகாப்பு சேவை | பாதுகாப்புக் கட்டணம் | 180,905.00 | |
| G/22 | | ஏ செந்தூர்செல்வம் | தரகுக் கட்டணம் | 30,641.49 | |
| G/23 | | கே தம்பிராசா | கேள்வி வைப்பு | 5,000.00 | |
| G/24 | | டீசல் அன்ட் மோட்டோஸ் இஞ்சினியரிங் | வாகன திருத்தம் | 104,179.45 | |
| G/25 | | பொது முகாமையாளர் ப நோ கூ ச | எரிபொருள் | 272,877.80 | |
| | | | | **2,151,799.34** | **69,502.40** |
| | | | | **2,622,786.84** | **84,596.72** |
| | | | | **4,774,586.18** | **154,099.12** |
| G/26 | 25 | வலம்புரி | விளம்பரம் | 1,350.00 | |
| G/27 | | வலம்புரி | விளம்பரம் | 3,000.00 | |
| G/28 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 2,100.00 | |
| G/29 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 5,400.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G/30 | | பணிப்பாளர் ஓய்விதியத் திணைக்களம் | ஓய்வூதிய பங்களிப்பு | 28,373.97 | |
| G/31 | | புதிய உதயன் | விளம்பரம் | 8,280.00 | |
| G/32 | | பி விசாகன் | பத்திரிகை | 2,870.00 | |
| G/33 | | சிறீ விக்னேஸ்வரா ஸ்ரோஸ் | நீர் வடிகட்டி திருத்தம் | 3,250.00 | |
| G/34 | | கருடா கென்ஸ்ரக்சன் | பிடிபணம் | 80,948.50 | |
| G/35 | | கேபிஎஸ் இஞ்சினியரிங் | பிடிபணம் | 79,565.21 | |
| G/36 | | ஏஏகென்ஸ்ரக்சன் | பிடிபணம் | 35,069.00 | |
| G/37 | | டயலொக் | றவுட்டர் கட்டணம் | 895.82 | |
| G/38 | | சிறீலங்கா ரெலிக்கொம் | தொலைபேசிக் கட்டணம் | 1,914.24 | |
| G/39 | | இலங்கை மின்சாரசபை | மின் கட்டணம் | 1,868.70 | |
| G/40 | | இலங்கை மின்சாரசபை | மின் கட்டணம் | 8,374.60 | |
| G/41 | | இலங்கை மின்சாரசபை | மின் கட்டணம் | ,209.90 | |
| G/42 | | இலங்கை மின்சாரசபை | மின் கட்டணம் | 5,089.50 | |
| G/43 | | இலங்கை மின்சாரசபை | மின் கட்டணம் | 953.70 | |
| G/44 | | றீ கென்ஸ்ரக்சன் | மயான அபிவிருத்தி வேலை | 465,820.20 | 51,757.80 |
| G/45 | | கிறியேட்டிவ் கென்ஸ்ரக்சன் | மயான அபிவிருத்தி வேலை | 370,788.61 | 41,198.74 |
| G/46 | | சென் அன்ரோனி கொம்பியூரட்டஸ் | ரோணர் கொள்வனவு | 198,440.00 | |
| G/47 | | ஐ7 கொம்பியூட்டஸ் | கணனி கொள்வனவு | 950,110.00 | |
| | | | | **2,255,671.95** | **92,956.54** |
| | | | | **4,774,586.18** | **154,099.12** |
| | | | | **7,030,258.13** | **247,055.66** |
| G/48 | 28 | செயலாளர் பிச நல்லூர் | விசேட கடன் | 32,000.00 | |
| G/49 | | எஸ் கலைமகள் மற்றும் ஏனையோர் | மேலதிக நேரம் மயான கொடுப்பனவு | 9,182.48 | |
| G/50 | | எஸ் கோகுலசுதன் | மேலதிக நேரம் | 75,655.71 | |
| G/51 | | கொக்குவில் மத்திய சசநி | கொக்குவில் கடைத்தொகுதி | 134,420.15 | 7,074.75 |
| G/52 | | சிறீலங்கா ரெலிக்கொம் | தொலைபேசிக் கட்டணம் | 33,048.01 | |
| G/53 | | டயலொக் | றவுட்டர் கட்டணம் | 863.82 | |
| G/54 | | இலங்கை மின்சாரசபை | மின்கட்டணம் | 5,183.10 | |
| G/55 | | கொக்குவில் பொற்பதி சசநி மற்றும் ஏனையவை | வருடாந்த மானியம் | 220,000.00 | |
| G/56 | | எஸ் ஞானசீலன் | இடர் கடன் | 250,000.00 | |
| G/57 | | ரி மலர்வேந்தன் | இடர் கடன் | 250,000.00 | |
| G/58 | | முகாமையாளர் மக்கள்வங்கி | எல்ஜிஐஐபி கடன் | 332,004.30 | |
| | | | | **1,342,357.57** | **7,074.75** |
| | | | | **7,030,258.13** | **247,055.66** |
| | | | | **8,372,615.70** | **254,130.41** |

**தீர்மானம் 11.03.2022/27**

Renovation of ward base Roads ( ward – 08) வேலைக்கான 1வது பகுதிக்கொடுப்பனவு ரூபா 718556.47 ஐ nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/28**

Renovation of ward base Roads ( ward – 09) வேலைக்கான 1வது பகுதிக்கொடுப்பனவு ரூபா 641,640.62 ஐ nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/29**

Retarring of ward based roads ( ward 10, 11,12) வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 1,275,362.40 ஐ Annish Construction ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/30**

Renovation of ward base Roads ( ward – 11) வேலைக்கான 1வது பகுதிக்கொடுப்பனவு ரூபா 1,548,415.34 ஐ Jeyas works ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/31**

Renovation of ward base Roads ( ward – 01) வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 641,281.88 ஐ nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/32**

Renovation of ward base Roads ( ward – 04) வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 109,311.40 ஐ nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/33**

Renovation of ward base Roads ( ward – 03) வேலைக்கான 1ம் பகுதிக்கொடுப்பனவு ரூபா 1,144,072.98 ஐ nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/34**

Renovation of Cancrete Roads ( ward – 04) வேலைக்கான 1ம் பகுதிக்கொடுப்பனவு ரூபா 951,949.96 ஐ nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/35**

Improvements of kodikadu, kokuvil, kadayaladi மயான வேலைக்கான 2வது பகுதிக் கொடுப்பனவு ரூபா 1,164,364.58 Tree Construction ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/36**

Improvements of Karikal, thirunelvely, Sithupathy வேலைக்கான 2ஆவது பகுதி கொடுப்பனவு ரூபா 424,034.73 ஐ Creative Construction ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/37**

Construction of Guard rail and Safety net infront of Kokkuvil Hindu College and Kokkuvil Amman Road வேலைக்கான கொடுப்பனவு ரூபா 1,999,145.00 கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்திற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/38**

LDSP வேலைத்திட்டத்தின் கொக்குவில் சந்தையில் கடைத்தொகுதிகளை அமைத்தலுக்கான 3வது பகுதிக்கொடுப்பனவு ரூபா 2,375,431.59 யும் அவற்றுக்கான Vat கொடுப்பனவு ரூபா 190,034.54யும் மாபிள் சிவில் இன்ஜினியருக்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 07வது விடயம் பெப்ரவரி மாத வருமான செலவு அறிக்கை அங்கீகாரம் பெறல். குறித்த விடயம் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபை அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/39**

பெப்ரவரி மாத வருமான செலவு அறிக்கையினை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீ.கணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 08 வது விடயம் ஏனையவை. ஏனையவையில் கீழ்வரும் உத்தியோகத்தருக்கு மார்ச் மாதம் இடர்கடன் வழங்குவதற்கு சபையின் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/40**

கீழ்வரும் உத்தியோகத்தருக்கு மார்ச் மாதம் இடர்கடன் வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- திரு.மு.சிறிமோகன் - 250,000.00

**தீர்மானம் 11.03.2022/41**

இடமாற்றத்தில் வருகை தந்த கீழ்வரும் உத்தியோகத்தர்களின் இடர்கடன் சீர்செய்வதற்கு சபை அனுமதி வழங்கவதாக கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- திரு.S. கலாதரன் - 217,855.74 (முகாமைத்துவ பயிற்சி அலகு)
- திருமதி.S.ரஞ்சிதமலர் - 210,000.00 (விளையாட்டுத்திணைக்களம். வடமாகாணம்)
- திருமதி.K.வளர்மதி - 213,000.00 (விளையாட்டுத்திணைக்களம். வடமாகாணம்)

ஏனையவையில் அடுத்து வாலையம்மன் சனசமூகநிலையத்தினுடைய புதிய யாப்பானது சனசமூகநிலைய உத்தியோகத்தரால் சிபார்சு செய்யப்பட்டு சபையின் அனுமதிக்காக வழங்கப்பட்டுள்ளது எனத்தெரிவித்து குறித்த யாப்பிற்கான அனுமதியினைக் கோரிய போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/42**

சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபார்சுடன் கிடைக்கப்பெற்ற வாலையம்மன் சனசமூகநிலைய புதிய யாப்பினை சபை ஏற்று அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி

அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து E- mail மூலம் முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது. அதில் தேனு களஞ்சியம், லவின் வெயிற்றேறியன் றெஸ்ரோறன்ட் மற்றும் ஆடியபாதம் வீதியில் புகையிரதக்கடவைக்கு அருகிலுள்ள கட்டப்பொருட்கள் விற்பனை நிலையம் ஆகியவை தொடர்பாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. இவர்கள் எம்மிடம் கட்டட அனுமதியின் போது Parking காட்டி அனுமதியினைப் பெற்றுக்கொண்டு வாகனத்தரிப்பிடத்திலும் அவர்கள் வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும் கனரக வாகனங்களை வீதிகளில் நிறுத்துவதனூடாக வீதிப்போக்குவரத்திற்கு சிரமமாகவும் வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஏதுவாக இருப்பதாகவும் குறித்த முறைப்பாட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதனை சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் திருநெல்வேலியில் சந்தியருகில் கனரக வாகனங்கள் தரித்திருப்பதால் போக்குவரத்து நெரிசல்கள் மற்றும் வீதி விபத்துகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உள்ளது. ஆகவே நாம் கனகர வாகனங்கள் ஒரு குறித்த நேரத்தில் மட்டும் தரித்திருத்தல் தொடர்பாக ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக குறித்த நேர அட்டவனை தொடர்பாகவும் அத்துடன் குறித்த 3 வியாபார நிலையங்களின் வீதியோரம் காட்சிப்படுத்தப்படும் வியாபாரப் பொருட்களை எமது வருமானப்பரிசோதகர் மூலமாக அகற்றப்படும் எனவும் தெரிவித்து கனரக வாகனங்கள் தரித்திருக்கும் நேர அட்டவனையினை இறுக்கமாக பின்பற்றுவது தொடர்பாகவும் நடைபாதை வியாபாரம் மற்றும் கனரக வாகனங்கள் தொடர்பாகவும் சபையில் விரிவாக ஆராயப்பட்டது.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்னைய தவிசாளர் காலத்தில் தம்மால் ஏற்கனவே குறித்த விடயம் தொடர்பான பிரேரணை கொண்டு வரப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்ததுடன் பரமேஸ்வரா பாடசாலைக்குச் செல்லும் வீதியில் கனரக வாகனங்கள் தொடர்ச்சியாக வருவதல் மற்றும் தரித்திருப்பதால் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு இடையூறாக இருக்கின்றது. அதனையும் கவனத்தில் எடுக்குமாறு தெரிவித்தார். கௌரவ உறுப்பினர் திரு.கு.மதசுதன் அவர்கள் ஆடியபாதம் வீதியில் கருவப்புலம் வீதி சந்திக்கும் சந்திக்கருகிலுள்ள மாஸ் வியாபாரக் கடை உரிடையாளர் கனரக வாகனத்தை மஞ்சள் கோட்டிலேயே நிறுத்தி பொருட்களை இறக்குவதால் ஏனைய வாகனங்கள் வருவது தெரியாது விபத்துகள் சில இடம் பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் திருநெல்வேலிச்சந்தி பகுதியில் வீதிச்சமிக்கை ஒளிரும் போது கண்ணன் கடைப்பகுதியில் கனரக வாகனங்கள் நிறுத்தியிருப்பதால் வாகன நெரிசல் மற்றும் போக்குவரத்து இடையூறுகள் ஏற்படுகின்றது. அதற்கு குறித்த கடைக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார். அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த கடைகளுக்கான வாகன தரிப்பிட வசதி எம்மால் சரிவர ஒழுங்குபடுத்தப்படாமையும் உள்ளது. எனவே குறித்த கடைகளுக்கு சந்தையின் மேற்கு பக்க வாயில் பகுதியில் பாத்றூம் பக்கம் அமைக்கப்பட்ட இருப்பு தடுப்பினை குறைப்பதன் மூலம் கிடைக்கப்பெறும் இடத்தினை சந்தைக்கடைகளின் வாகனங்கள் தரித்திருந்து பொருட்களை இறக்குவதற்குரியதாக ஒழுங்குபடுத்துவன் மூலம் வரும் காலத்தில் ஏற்படும் தவறுகளை குறைக்கலாம் என எண்ணுவதாகத் தெரிவித்தார்.

அதன் போது கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் சந்தையினை ஒழுங்கமைப்பில் திடீர் விஜயம் மேற்கொள்ள வேண்டும் எனவும் செயலாளர் அவர்களின் ஒத்துழைப்பினையும் கோரி ஏற்கனவே முன்னைய தவிசாளர் காலத்தில் வழங்கப்பட்ட அதிகாரத்தின் மூலமாக அவரால் பல ஆக்கபூர்வமாக வேலைகள் இடம்பெற்றன. தற்போதும் அதிகாரத்தையும் வழங்கினால் அவர் தமது தற்துணிவில் ஆக்கபூர்வமாக செயற்பாடுகளை மேற்கொள்வார் எனவும் நேரக்கட்டுப்பாடுகள், வீதிக்கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்த போது கௌரவ தவிசாளர் அவர்களினால் செயலாளர் தற்போதைய சந்தைக்குழுவிலும் அங்கம் வகிப்பதாகவும் அவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறவில்லை எனவும் தெரிவித்த போது கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்களினால் அன்று தாம் சந்தைக்குழுவில் இருந்த போது செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் இன்று வரை இருக்கின்றது எனவும் சில சந்கைக் கள விஜயங்களுக்கு செயலாளர் அவர்களும் வருகை தந்திருந்தார் எனவும் கடந்த ஆண்டு சந்தை வரி தொடர்பாக அதிகாலை 4.00 மணிக்கு விஜயம் செய்து

அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது அதன்போதும் செயலாளர் அவர்கள் அங்கம் வகித்தார் எனவும் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் சந்தைக்கு தம்மால் திடீர் விஜயம் மேற்கொள்ளப்படுவதாகவும் சந்தை நாட்டாமைகளுக்கு T-Shirt வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அத்துடன் CCTV கமேராக்கள் உரிய திசைகளை நோக்காது வேறு பக்கம் திசை திருப்பப்பட்டுள்ளன. அவற்றை சீராக்கி அவற்றை பொருத்திய நளின் நிறுவனத்தின் சேவீஸ் காலம் நிறைவடைந்துள்ளதால் அவற்றுக்கான சேவீஸ் செய்வதற்கு நிதி செலுத்தியே சேவீஸ் செய்ய வேண்டும் அவற்றுக்கும் சபையிடம் அனுமதி கோரிய போது குறித்த விடயங்கள் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/43**

வியாபார நிலையங்களில் வீதியோரம் நடைபாதைகளில் காட்சிப்படுத்தப்படும் பொருட்களை வருமானப்பரிசோதகர் மூலமாக அகற்றி இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதுடன் திருநெல்வேலிச் சந்தி மற்றும் சந்தையினை அண்மித்த பகுதிகளில் சனநெரிசலை தவிர்க்கும் நோக்கில் மாலை 6.00 மணிக்கு பின்னரும் காலை 7.00 மணிக்கு முன்னரும் பொருத்தமான இடத்தில் கனரக வாகனங்களை நிறுத்துவதற்கும் ஏனைய நேரத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு தடை விதித்து ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மான நேர அட்டவனையில் திருத்தம் மேற்கொண்டு அவற்றை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதுடன் குறித்த நேர அட்டவணைப் பிரதியை கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் DIG ஆகியோருக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்வதென கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/44**

திருநெல்வேலி சந்தையில் நளின் நிறுவனத்தனால் பொருத்தப்பட்ட CCTV கமேராக்களுக்கான உத்தரவுக்காலம் (Warranty) முடிவடைந்துள்ளதால் அவற்றுக்கான சேவிஸ் மேற்கொள்வதற்கும் அவற்றுக்கான கொடுப்பனவுகளை சபை நிதியிலிருந்து வழங்குவதற்கும் சபை தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து வீதிகளின் பெயர்ப்பலகை செய்வதற்காக எம்மால் வழங்கப்பட்ட வேலையில் Refelaction Stricker மேல் எழுத்துக்கள் cutting Stricker ஆக ஒட்டுவதற்கு கூறுவிலை பெறப்பட்ட போதும் பெயர்பலகையில் அடையாள வரைபடம் இடவேண்டியுள்ளதால் ஏற்கனவே கோரப்பட்ட செயற்பாடுகள் நீண்ட காலம் பாவனைக்கு உகந்ததாக இருக்காது எனவும் வெட்டி ஒட்டாது அதிலேயே print செய்வதால் நீண்ட காலம் பயன்படும் எனவும் தெரிவிக்கப்பட்டமையாலும் மேற்படி வேலைகளை கோரப்பட்ட கூறுவிலைக்கு அதிகமாக இருந்தாலும் ஒப்பந்தகாரரால் கோரப்பட்ட கூறுவிலையிலேயே செய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே குறித்த வேலையினை மேற்கொள்வதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/45**

வீதிகளின் பெயர்ப்பலகை செய்வதற்காக எம்மால் வழங்கப்பட்ட வேலையில் Refelaction Stricker மேல் எழுத்துக்கள் cutting Stricker ஆக ஒட்டுவதற்கு கூறுவிலை பெறப்பட்ட போதும், மேற்படி வீதி பெயர்பலகையில் அடையாள வரைபடம் இடப்பட வேண்டி உள்ளதால் குறித்த வேலைகளை ஒப்பந்தகாரர் கோரிய கூறுவிலையில் மேற்கொள்வதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளமையினை கருத்தில் கொண்டு மேற்படி வேலையினை மேற்கொள்வதற்கு சபை அனுமதி வழங்கவதாக கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கொக்குவில் இந்து மயானத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டர் திருடப்பட்டுள்ளதால் குறித்த மயான சுற்றுப்புற பாதுகாப்பினை உறுதி செய்து அம் மயான சபையின் நிலையான வைப்பிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து மின்மோட்டர் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு மயான சபை கோரிக்கை சமர்ப்பித்துள்ளது எனத் தெரிவித்து குறித்த மயானத்தின் மதில் தற்போது உயர்த்தி கட்டப்பட்டுள்ளது. மயானங்களுக்கு காவலாளிகளை நியமிக்கவுள்ளளோம். எனவும் தெரிவித்து சபை அனுமதி கோரிய போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/46**

கொக்குவில் இந்து மயானத்தில் பொருத்தப்பட்ட மின்மோட்டர் திருடப்பட்டுள்ளதால் குறித்த மயான சுற்றுபுற பாதுகாப்பினை உறுதி செய்வதெனவும் இம்மயான சபையின் நிலையான வைப்பிலுள்ள வட்டிப்பணத்தில் புதிய மின்மோட்டர் பொருத்துவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திர.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சென்ற வருடம் பாதீட்டில் 8 அடிக்கு குறைவான அகலம் குறைந்த வீதிகளை நடைபாதைகளாக பிரகடனப்படுத்தி கொங்கிறீட் வீதியாக புனரமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த வெள்ளப்பாதிப்புக்குள்ளாகும் நடைபாதைகளை பொது மக்கள் சம்மதக்கடிதம் பெற்று சபைக்குரிய பொது நடைபாதை எனப் பிரகடனப்படுத்தி பொருத்தமான சனசமூகநிலையமூடாக புனரமைப்பு செய்வதற்கு சபையின் அனுமதி கோரிய போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/47**

வெள்ளப்பாதிப்புக்குள்ளாகும் நடைபாதைகளை பொது மக்கள் சம்மதக்கடிதம் பெற்று அவற்றை சபைக்குரிய பொது நடைபாதை எனப் பிரகடனப்படுத்தி பொருத்துமான சனசமூகநிலையமூடாக கொங்கிறீடாக புனரமைப்பு மேற்கொள்வதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து சபையினால் ஏற்கனவே பயன்படுத்திய Nallur.Ps.gov.lk வலையமைப்பினை தற்காலிகமாக இயக்கிக்கொண்டு தற்போதைய எமது செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகளை விரைவாக உடனுக்குடன் வெளிப்படுத்தி முன்நகர்த்தி செல்வதற்கு Face book ஒன்றை உருவாக்கி செயற்படுத்துவதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/48**

சபையினால் ஏற்கனவே பயன்படுத்திய Nallur.Ps.gov.lk என்ற வலையமைப்பிற்குரிய செயற்படுத்தல் கட்டணமாக ரூபா 5000.00 செலுத்துவதுடன் குறித்த வலையமைப்பினை தற்காலிகமாக இயக்கிக்கொண்டு தற்போதைய எமது செயற்பாடுகளை விரைவாக முன்நகர்த்தி செல்வதற்கு Face book ஒன்றை உருவாக்கி எமது நடைமுறைகளை வெளிப்படுத்துவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருக.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்களினால் கீழ்வரும் விபரங்கள் இம்மாதம் நடைபெறவுள்ள மாதாந்த சபைக்கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார் எனத் தெரிவித்து அதன் விளக்கத்தை கௌரவ உறுப்பினரின் சம்மதத்துடன் சபையில் தெரிவித்தார். முதலாவது விடயம் நல்லூர் பிரதேசசபையின் தலைமை காரியாலயத்திற்கு தெற்கு புறமுள்ள வெற்றுக்காணி பிரதேசசபையின் தேவைக்கு தேவைப்பாடாக உள்ளமையால் அக்காணியை பிரதேசசபை கொள்வனவு செய்யவுள்ளது என பத்திரிகை மூலமாக விளம்பரம் செய்யுமாறு வேண்டுகின்றோம். **அதற்குரிய விளக்கம்** குறித்த காணி தொடர்பாக தொடர் நடவடிக்கையில் தான் உள்ளது. காணி உறுதிகள் பெற்று விலை மதிப்பீட்டுத்திணைக்களத்திற்கு காணியின் பெறுமதியினைக் கணிக்க அனுப்பப்பட்டுள்ளது. மேற்கொண்டு பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டிய தேவைகள் இல்லை

காணி உரிமையாளர்கள் பிரதேசசபைக்கு வழங்குவதற்கு தான் விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே எதிர்வரும் 15ம் திகதிய மகளிர் தினத்தை முடித்துக்கொண்டு குறித்த இக்காணி மற்றும் கோண்டாவில் காணி ஆகியவற்றில் கூடுதல் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

அடுத்து கௌரவ உறுப்பினரின் விடயம் கொக்குவில் சந்தைக்கு வடக்குப்புறமுள்ள வீட்டுடன் உள்ள காணி உரிமையாளர் வெளிநாட்டில் வசிப்பதனால் அக்காணி அமைந்துள்ள வீட்டில் அனுமதியில்லாது ஒருவர் குடியிருப்பதால் அக்காணியையும் பிரதேசசபையின் தேவைப்பாட்டிற்கு கொள்வனவு செய்யவிருப்பதாக பத்திரிகை மூலமாக விளம்பரப்படுத்தவும். **அதற்குரிய விளக்கம்** குறித்த காணி உரிமையாளரை தமக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும் அத்துமீறி குடியிருப்பவரை அகற்றித்தருவது காணி உரிமையாளரின் கடமை. அது எமது கடமையில்லை எனவும் குறித்த உரிமையாளர் அக்காணியை விற்பதற்கு நாட்டம் காட்டவில்லை. அவ்வாறு விற்பனை செய்ய முயன்றால் பார்ப்போம். இதனை தங்களுக்கு தனிப்பட்ட முறையில் தெரிவிக்க இருந்தால் உள்வாங்கவில்லை எனத் தெரிவித்தார்.

ஏனையவை விடயத்தில் அடுத்து சுகயீனம் காரணமாக இன்றைய சபைக்கூட்டதிற்கு கௌரவ உறுப்பினர்களான திரு.தா.தியாகமூர்த்தி, திருமதி.அ.அகிலாண்டரூபி, செல்வி.வி.சிந்தஜா, செல்வி.கு.பிரிந்தா ஆகியோர் வருகை தரமுடியவில்லை என கடிதமூலம் அறியத்தந்துள்ளதாக தெரிவித்து அவர்களது விடுமுறைக்கான சபை அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.03.2022/49**
எமது கௌரவ உறுப்பினர்களான திரு.தா.தியாகமூர்த்தி, திருமதி.அ.அகிலாண்டரூபி, செல்வி.வி.சிந்தஜா, செல்வி.கு.பிரிந்தா ஆகியோர் சுகயீனம் காரணமாக இன்றைய (11.03.2022) கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியவில்லை என கடிதம் மூலமாக அறியத்தந்துள்ளமையினை கௌரவ சபை ஏற்று அவர்களது விடுமுறைக்கான அனுமதியினை வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.க.முருகையா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் எமது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வாழ்வாதார உதவிகள் வழங்குவதற்கான விபரங்கள் தொடர்பாக வட்டார உறுப்பினர்களாகிய எம்முடன் கலந்தாலோசித்து தொடர்பு கொள்ளாமல் நேரடியாக தாமே வீடுகளுக்கு செல்வதால் பிரதேசசெயலகத்தால் வாழ்வாதாரம் வழங்கப்படுவதாக மக்கள் மத்தியில் அபிப்பிராயம் ஏற்படுகின்றது. எனவே ஏதாவது விடயங்கள் வட்டாரங்களில் மேற்கொள்வதாயின் வட்டார உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு செயற்படுமாறு தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்ட போது கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களது செயற்பாட்டு அறிக்கை மாதாந்த கூட்டத்திற்கு சமர்ப்பித்தால் அவர்கள் என்ன செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர் என்பது வட்டார உறுப்பினர்களுக்கு தெரியவரும் எனத் தெரிவித்த போது கௌரவ தவிசாளர் அவர்களினால் இனிவரும் மாதாந்த கூட்டங்களில் குறித்த செயற்பாட்டறிக்கை சபைக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

ஏனைய விடயத்தில் கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் அரச காணிகளில் குடியிருப்பவர்களுக்கு கடிதம் அனுப்பியது தொடர்பாக குறிப்பாக ஐயப்பன் ஆலயம் மற்றும் கலாசாலை காணி தொடர்பாக ஏதாவது முன்னேற்றம் இருக்கின்றதா எனக் கேட்ட போது கௌரவ தவிசாளர் அவர்களினால் ஐயப்பன் ஆலய பூசகருடன் தொடர்பு கொண்ட போது அவர் தாம் நீண்ட கால குத்தகைக்கு சம்மதம் தெரிவித்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

ஏனைய விடயத்தில் கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்னைய காலத்தில் திருநெல்வேலிச் சந்தை வியாபாரிகளிடம் அவர்களது படம் பெற்று அடையாள அட்டை போன்று வழங்கப்பட்டது. அதேபோன்று தற்போதும் வழங்கினால் கடைகள் கைமாறுவதை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கலாம் எனவும் அத்தடன் கொக்குவில் சந்தியில் இருந்து ஆடியபாதம் வீதியில் No

parking பலகை இதுவரை பொருத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார். அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் கடைகள் கைமாற்றியவர்கள் தொடர்பாக வருமானப்பரிசோதகர் மூலமாக இனம் கண்டு ஏற்கனவே தீர்மானம் எடுக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தற்போதுள்ள திரு.V. மயில்வாகனம் வருமானப்பரிசோதகர் மூலமாக சந்தை பெயரில் இல்லாதவர்கள் இடங்கள் கைப்பற்றப்பட்டு புதிதாக இடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சந்தையில் அனைத்து இடங்களும் வழங்கிய பிற்பாடு படங்கள் பெறப்பட்டு அடையாள அட்டை வழங்கப்படும் எனவும் எமது வீதிகள் தவிர்ந்த ஏனைய RDA, RDD வீதிகளில் உடனடியாக No parking பலகை பொருத்த முடியாது எனவும் குறித்த RDD திணைக்களத்தினால் தான் அவற்றினை மேற்கொள்ள முடியும் எனவும் அவை தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

ஏனைய விடயத்தில் கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் யாழ் வளைவு செம்மணி வீதியால் பயணிக்கும் போது வலிகிழக்குப்பகுதியில் குப்பைகள் வீசப்பட்டு துர்நாற்றம் வீசுவதாக குப்பைகள் காணப்படுவதாகவும் தெரிவித்து குறித்த பகுதியை இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது போல வலிகிழக்கும் நாமும் இணைந்து துப்பரவு செய்வதனை தொடர்ந்து சுழற்சி முறையில் மேற்கொள்வதுடன் திருநெல்வேலி சந்தி அழகுபடுத்தலையும் விரைவு படுத்துமாறும் அத்துடன் செம்மணி அழகுபடுத்தலையும் விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் வலிகிழக்கு பகுதியையும் எமது ஊழியர்கள் தான் அநேகமாக துப்பரவு செய்து வருகின்றனர். அவர்கள் குறித்த பகுதியில் கவனம் செலுத்தவில்லை. எமது கோரிக்கைக்கு அமைவாக அப்பகுதியை எமக்கு கையளிக்கவும் இல்லை. வலிகிழக்கு தவிசாளர் கூறியதற்கு அமைவாக இச் செயற்றிட்டத்தை முன்னெடுப்போம் எனத் தெரிவித்தார்.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் கருத்துரைக்கையில் பிரதேசசெயலகத்தால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக முன் கூட்டி பிரதேசசபைக்கு அறியத்தருமாறு பிரதேசசெயலகத்திற்கு கடிதம் அனுப்புவதாக பெப்ரவரி மாத கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு பின்னர் கடந்த 25ஆம் திகதிய விசேட கூட்டத்திலும் குறித்த விடயம் தொடர்பாக தம்மால் குறிப்பிடப்பட்டது. ஆனால் அனுப்பிய கடிதப் பிரதி கிடைக்கவில்லை. குறித்த கடிதம் அனுப்பப்பட்டதா எனவும் தெரியவில்லை எனத்தெரிவித்த போது கௌரவ தவிசாளர் அவர்களினால் பிரதேசசெயலகத்திற்கு 18.02.2022ம் திகதியே குறித்த விடயம் தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்து அக் கடிதம் சபையில் வாசிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் காரைக்கால் இந்து மயானத்தின் கேற் திறந்த நிலையிலே காணப்படுவதாகவும் அங்கு சமூகவிரோத செயல்கள் இடம்பெறுவதாகவும் தமக்கு மக்கள் தொலைபேசி வாயிலாக அறியத்தந்துள்ளதாக தெரிவித்ததுடன் குறித்த விடயம் வட்டார உறுப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு சபையால் என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளீர்கள் எனக்கேட்டார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் உடனடியாக நேற்றைய தினம் பெரிய பூட்டு போடப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் உள்பக்கமாக பூட்டு போடுவதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் அப்பகுதி மக்களும் அக்கறை காட்ட வேண்டும். இவ்வாறு பூட்டுக்கள் பல உடைக்கப்படுகின்றது. இதற்கு காவலாளிகளைத் தான் இரவு பகல் கடமைக்கு அமர்த்த வேண்டும் எனத்தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வீதியோரங்களில் குப்பைகள் வீசாத வகையில் சிறு பூமரங்கள் நாட்டி அழகுபடுத்தலாமா எனக் கேட்ட போது கௌரவ தவிசாளர் அவர்களினால் போக்குவரத்திற்கு இடையூடற்ற வகையில் அழகுபடுத்தலை மேற்கொள்ளலாம் எனவும் எமது செயலாளர் அவர்களுக்கும் இவ்வாறு பலாலி வீதியில் இருந்து கோண்டாவில் டிப்போ வரை அழகுபடுத்துவதற்குரிய முன்யோசனை இருப்பதாகவும் அதனையும் விரைவில் செயல்படுத்தலாம் என்றும் தெரிவித்து ஒவ்வொரு வட்டார உறுப்பினர்களும் நினைத்தால் தமது வட்டாரங்களை இவ்வாறு அழகுபடுத்தலாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் குறிப்பிடுகையில் காரைக்கால் இந்து மயானத்தை பொறுத்த வரையில் நேற்றைய விடயம் தான் சபையின் கவனத்திற்கு வந்திருப்பதாகவும் இவை காலம் காலமாக நடைபெற்று வருவதாகவும் தெரிவித்து இதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை

எனவும் இதில் அனைவருக்கும் பொறுப்பிருக்கின்றது எனவும் இதனை அப்பகுதி மக்கள் செய்யவில்லை எனத் தெரிவித்து வெளியிடத்திலிருந்து வருபவர்களாலேயே மேற்கொள்ளப்படுவதாகவும் இதற்கு தீர்வாக காவலாளியை நியமிக்குமாறு கௌரவ தவிசாளர் பதவிக்கு வருவதற்கு முன்னரே தம்மால் தெரிவிக்கப்பட்டதாகவும் இதுவரை நியமிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் தனியே ஒரு மயானத்திற்கு மட்டும் கேள்வி கோரி காவலாளியை அமர்த்த முடியாது. காரைக்காலில் காவலாளி அறை இருக்கின்றது. ஏனைய மயானங்களுக்கு அறை வசதி இல்லை. குறித்த தங்குமிட வசதி அனைத்து மயானத்திலும் நிறைவடையும் நிலையிலுள்ளது. வரும் மாதத்தில் 6 மயானத்திற்கும் காவலாளிகள் நியமிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ தவிசாளர் அனுமதியுடன் செயலாளர் அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் குறிப்பிட்டது போல அழகுபடுத்தல் மேற்கொள்ளும் போது பிரதேசசபையுடன் இணைந்து பொதுமக்கள் பங்களிப்புடன் செயற்றிட்டம் மேற்கொள்ளும் போது எதிர்காலத்தில் குறித்த பதிவு எமக்கு வேறு தேவைகள் அதாவது வேறு நிதிகள் அல்லது திட்டங்களுக்கு உதவியாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் கௌரவ தவிசாளர் அவர்களினால் நன்றிகள் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து கூட்டமானது பி.ப.12.35 மணியளவில் நிறைவடைந்தது

செயலாளர்.